Department of Education
GOVERNMENT OF WESTERN AUSTRALIA

Shaping the future

# நடத்தை விதிகள்



# தலைமை இயக்குநரிடமிருந்து செய்தி

## நாம் செய்யும் அனைத்துக்கும் இதயமாக இருப்பது மாணவர்களே.

அவர்கள் கல்விக்காகவும், அக்கறைக்காகவும் நம்மை நம்பி இருப்பது நமக்கான சிறப்புச் சலுகை மட்டுமல்ல. அது மிகப்பெரிய பொறுப்பு. இந்த மாகாணத்தில் கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்பதில், அனைத்து மாணவர்களுக்கும் அர்த்தமுள்ள பாதைகளைப் பெறச்செய்வதில் நம் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் செய்து ஒன்றிணைந்து பணியாற்றுகிறோம்.

இதை அடைவதற்கு, நமது மாணவர்களின் தேவைகளையும் இலட்சியங்களையும் பூர்த்திசெய்யக்கூடிய கலாச்சாரத்தையும் பணிச்சூழலையும் நாம் உருவாக்க முனைகிறோம். நமது அனைத்து முடிவுகளும் நடவடிக்கைகளும் நமது விழுமியங்களையும் நடத்தைகளையும் பிரதிபலிப்பது அவசியம்.

நமது **நடத்தை விதிகள்** நமது பகிரப்பட்ட விழுமியங்கள் மீது கட்டியமைக்கப்பட்டுள்ளது: **ஒற்றுமை**, **சமத்துவம்**, **குரல்**, **உண்மை பேசுதல்**, **குழுவாகச் செயல்படுதல்**, **அக்கறை**,**கற்றல்**; மற்றும் நமது பணியிட நடத்தைகள்: **நோக்கம் கொண்டதாக**, **இணைந்துள்ளதாக**, **உயர் செயல்திறன்**, மற்றும் **நெறிசார் தலைமை**.

இந்த விழுமியங்களும் நடத்தைகளும் நம் செயல்களுக்கும் நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவுக்கும் மையமாக உள்ளது.

இந்த விதிகள் பணியாளர்கள் பணிசார்ந்ததும் தனிப்பட்டதுமான முடிவுகளை எடுக்கையில் அவர்கள் கடைபிடிக்க வேண்டிய தரநிலைகளின் தொகுப்பினை ('தரநிலைகள்') வழங்குகிறது. இந்த விதிகளையும், தரநிலைகளையும் அனைத்து தொடர்புடைய கொள்கை மற்றும் சட்டபூர்வ கடமைகளையும் புரிந்துகொள்வதும் அதன்படி ஒழுகுவதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

முதல்வர்களும் மேலாளர்களும் ஒற்றுமையையும், பொறுப்புணர்வையும் கட்டமைக்கவும் நெறிசார்ந்த விழுமியங்கள் அடிப்படையிலான கலாச்சாரத்தைக் கொண்டு செல்ல இந்த விதிகளைப் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



லிசா ரோட்ஜர்ஸ்
**தலைமை இயக்குநர்**



# அங்கீகாரம்

## மேற்கு ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள நமது மாணவர்கள் வாழும், கல்வி கற்கும் நிலங்கள் மற்றும் நீர்நிலைகளின் பாரம்பரியப் பாதுகாவலர்களை நாங்கள் அங்கீகரித்து மரியாதை செலுத்துகிறோம்.

மூத்தோர், பெற்றோர், குடும்பங்கள், சமூகங்கள் இவையே தங்கள் குழந்தைகளுக்கு முதன்மையான கல்வியைத் தருகின்றன என்பதைப் புரிந்துகொள்ளவும் ஏற்கவும் செய்கிறோம். வகுப்பறைக்கு பூர்வகுடியினக் குழந்தைகள் கொண்டுவரும் கலாச்சாரங்களையும் வலிமையையும் நாங்கள் அங்கீகரித்து மதிக்கிறோம். பூர்வகுடியின மக்களுக்கு நாட்டுடனும், சமூகத்துடனும், மொழி, கலச்சாரத்துடனும் தங்கள் தொடர்புகளைப் பகிர்வதன் வாயிலாகவும் பலதலைமுறைகளாகக் கடத்திவரப்பட்ட அவர்களது வாய்வழி வரலாறு மூலமாக, கதைகள், வாழ்க்கை அனுபவங்கள் மூலமாக கற்றுத்தருவதிலும் கற்றலிலும் நீண்ட பாரம்பரியம் உள்ளது.

பூர்வகுடியினக் குழந்தை தங்களது வீடுகள் மற்றும் சமூகங்களில் இருந்து வகுப்பறைக்குத் தன்னுடன் எடுத்துவரும் கற்றலை நாங்கள் அங்கீகரித்து மதிக்கிறோம்.

பூர்வகுடியினம் என்ற வார்த்தை உள்நாட்டிலுள்ள பூர்வகுடியினர், பூர்வகுடியினம் மற்றும் டோரஸ் ஸ்ட்ரைட் தீவினரையும் குறிக்கும். தனிநபர்கள் என்று சொல்லும்போது பூர்வகுடியினர் என்ற பதத்தைப் பயன்படுத்தவும்.

# விழிப்புணர்வு

## கல்வித்துறைக்காகப் பணியாற்றும்போது, விழுமியங்களைத் தழுவி நடந்துகொள்வதையும் இந்த நடத்தை விதிகளின் தரநிலைகளைப் பூர்த்திசெய்யவும் ஒப்புக்கொள்கிறோம்.

பொதுமக்கள் அதிகாரிகளாக சமூக எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், துறையில் பொதுமக்கள் நம்பிக்கையைப் பேணும் விதத்திலும் நாம் நடந்துகொள்வது முக்கியம்.

அனைத்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட துறை பிரதிநிதிகளாக, பணிக்கு வெளியே நமது நடத்தையானது துறையின் இறையாண்மையைப் பேணுவதாகவும் நமது கடமைகளைச் செய்வதில் நமது திறனைப் பாதிக்காதபடி இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

இந்த விதிகள் தயார்செய்யப்பட்டு ஆணையாளரின் அறிவுறுத்தல் எண் 7 – நெறிசார் விதிகளுக்கேற்ப வாசிக்கப்பட வேண்டும்.

CC BY

# நமது விழுமியங்கள்

இந்தத் துறையானது நெறிசார் பழக்கத்தையும் பொருத்தமான ஒழுக்கம் மற்றும் நடத்தை தரநிலைகளையும் ஊக்குவிக்கிறது. அனைவரும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்படும் கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் பணிச்சூழல்களுக்கும் நாம் உறுதிபூண்டுள்ளோம்.

அலுவலரின் நடவடிக்கைகள் மாணவர்கள், பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள், சமூகங்கள், பங்குதாரர்கள் மற்றும் பிற அனைவருக்கும் நாம் செலுத்த வேண்டிய சமூகப் பொறுப்புகளைப் பிரதிபலிக்கக்கூடிய நமது விழுமியங்களால் வழிநடத்தப்படுவதாக இருக்க வேண்டும்.

இந்த விழுமியங்கள் துறையின் அன்றாடப் பணிகளில் நடைமுறையில் வெளிப்படுவதாக இருக்க வேண்டும்.



## ஒற்றுமை
நல்ல கல்வி என்பது அனைத்தையும் தாங்கி நிற்கும் ஒரு அஸ்திபாரம் போன்றது என நாங்கள் நம்புகிறோம். இந்தப் பொறுப்பினை நாங்கள் இலேசாக எடுத்துக் கொள்வதில்லை. இதன் ஒரு பகுதியாக இருப்பதில் உரிமைபெற்றவர்களாக உணர்கிறோம்.

எல்லா நேரங்களிலும் மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் சிறந்த நலன் பயக்கக்கூடியதன் அடிப்படையில் நாங்கள் செயல்படுகிறோம்.

நாங்கள் பொறுப்புடையவர்களாகவும் நேர்மையாகவும் வலுவான நெறி மற்றும் ஒழுக்கக் கொள்கைகளைக் கொண்டுள்ளோம்.

## சமத்துவம்
மாணவர்கள் மற்றும் அலுவர்களின் வெவ்வேறு சூழல்கள், தேவைகள், நாட்டங்களை நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

இனவாதம், பாகுபாடு, அடாவடி, துன்புறுத்தல் அல்லது சுரண்டலில் இருந்து விடுபட்ட கற்றலுக்காகவும் பணிச்சூழலுக்காகவும் நாங்கள் கடுமையாக முயல்கிறோம்.

வெற்றிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள் உண்டு என்பதை நம்புகிறோம். எங்கள் நோக்கம் ஒவ்வொரு குழந்தையும் தனது வழியைக் கண்டடைய உதவுவதுதான்.

## குரல்
பிறரிடமிருந்து, எங்கள் மாணவர்கள், குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பங்குதாரர்கள் சொல்வதை நாங்கள் கவனமுடன் கேட்கிறோம்.

நேர்மையாகவும் மரியாதையாகவும் யோசனைகளை வெளிப்படுத்துவதையும் பன்முகச் சிந்தனைகளையும் நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

குழந்தைகள் மற்றும் இளையோரின் கல்வியில் கூட்டாளிகளாக இருப்பதற்காக அவர்களின் குரலுக்கு அதிகாரம் அளிக்கிறோம்.

## உண்மை பேசுதல்
பூர்வகுடியின மக்களின் பன்முக வரலாறுகள், அனுபவங்கள், உலகப்பார்வைகள் குறித்து அறிந்துகொள்ள உறுதிபூண்டுள்ளோம்.

கலாச்சார ரீதியாக பாதுகாப்பான கற்றலையும் பணிச்சூழலையும் கலாச்சார ரீதியில் எதிர்வினையாற்றும் சேவைகளையும் இனவாதமோ பாகுபாடோ இல்லாத நிலையை உருவாக்குகிறோம்.

## குழுவாகப் பணியாற்றுதல்
ஒருவருக்கொருவர் ஆதரவும், ஊக்கமும், உத்வேகமும் அளித்து அனைவரின் பங்களிப்பையும் மதிக்கிறோம்.

அனைவரும் உள்ளடக்கியதாக இருப்பதை நாங்கள் நம்புகிறோம்.

மாணவர்கள் சிறப்பான சாதனைகளை எட்டுவதில் உதவுவதற்காக ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

## அக்கறை
பரஸ்பர மரியாதையை நாங்கள் கடைபிடிக்கிறோம். பொருத்தமான உறவுகளை உருவாக்குவதிலும் பேணுவதிலும் உள்ள எங்கள் பொறுப்பினை ஒப்புக்கொள்கிறோம்.

நாங்கள் கவனமுள்ளவர்களாகவும் கருத்தில் கொள்பவர்களாகவும் உள்ளோம்.

எங்களையும், பிறரையும் எங்கள் வளங்களையும் பத்திரமாக வைத்துக்கொள்ள தீவிர முயற்சி எடுக்கிறோம்.

## கற்றல்
கற்றலிலும் அதை மற்றவர்களுக்கு ஊக்குவிப்பதிலும் நேர்மறையான அணுகுமுறையைக் கொண்டுள்ளோம்.

அனைத்து மாணவர்களுக்கும் கற்கும் திறனுண்டு என்ற எங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் மாணவரின் கற்றலை மேம்படுத்துகிறோம்.

# எங்கள் பணியிட நடத்தைகள்

**நோக்கம் கொண்டது**
எங்கள் முடிவுகளிலும் செயல்களிலும் அதன் மையமாக ஒவ்வொரு மாணவரின் தேவைகளையும் இலட்சியங்களையும் வைக்கிறோம்.

**இணைந்திருப்பது**
பொறுப்புள்ள சேவைகளை வழங்குவதற்கு எங்கள் திறன்களை இணைக்கிறோம்.

**உயர் செயல்திறன்**
மொத்த வேலையையும் முடிப்பதற்கும் சிறந்த விளைவை எட்டுவதற்கும் சேர்ந்து பணியாற்றுகிறோம்.

**நெறிசார் தலைமை**
மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தீர்வுகளை உருவாக்குவதற்கு நாங்கள் ஒருவரையொருவர் நம்பி இருக்கிறோம்.

# எங்கள் தரநிலைகள்

## இந்த விதிகள் பணியாளர்களாக எங்கள் நடத்தைக்கான வழிகாட்டுதலுக்கு தரநிலைகளின் தொகுப்பை வழங்குகின்றன.

இந்த தரநிலைகள் பணிரீதியாகவும் தனிப்பட்ட அளவிலும் முடிவெடுக்கையில் வழிகாட்டுதலைத் தருவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. நமது தனிப்பட்ட வாழ்க்கைச்சூழலில் எடுக்கப்படும் முடிவுகளும் நமது பணிநிலையை பாதிக்கக்கூடும்.

தரநிலைகளைப் புரிந்துகொண்டு அதன்படி நடப்பது நமது பொறுப்பாகும். அவை அனைத்து தொடர்புடைய சட்டம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின்படி வாசிக்கப்பட வேண்டும். கூடவே, நமது முடிவெடுத்தலை நியாயமாகவும், பாரபட்சமின்றியும், சரியான நேரத்திலும் செய்ய வேண்டும்.

**நயமாகவும் கண்ணியமாகவும் நடந்துகொள்ளுதல்**
நமது உறவுகளில் நேர்மையாகவும் நம்பகமாகவும் இருந்து, வேலையிலும் சமூகத்திலும் எல்லா நேரங்களிலும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

**கலாச்சாரப் பாதுகாப்பை உருவாக்குதல்**
நீடித்த கலாச்சார ரீதியான பாதுகாப்பையும் பொறுப்புள்ள வேலை மற்றும் கற்றல் சூழலை உருவாக்குகிறோம்.

**சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உட்படுத்துதலைக் கடைபிடித்தல்**
அனைத்து பின்புலங்களில் இருந்து வந்தோரையும் நாங்கள் கொண்டாடவும் தழுவிக்கொள்ளவும் செய்கிறோம். ஒவ்வொருவரையும் தனிநபராக மதிக்கிறோம்.

**பாதுகாப்பையும் நல்வாழ்வையும் பேணுதல்**
எங்களது, எங்கள் மாணவர்கள், எங்கள் சக பணியாளர்கள் மற்றும் எங்கள் பங்குதாரர்களின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் நாங்கள் பேணுகிறோம்.

**துல்லியமான பதிவுகளைப் பேணுதல்**
தகவல்களைப் பதிவுசெய்தல், கையாளுதல் மற்றும் பராமரித்தலில் நாங்கள் கறாராக இருக்கிறோம்.

**அதிகாரப்பூர்வ மற்றும் இரகசியத் தகவல்களைக் காத்தல்**
அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டும் நாங்கள் அதிகாரப்பூர்வ மற்றும் இரகசியத் தகவல்களை அணுகவும் பயன்படுத்தவும் செய்கிறோம்.

**நேர்மையான நடத்தை**
எங்கள் நடத்தைகளில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பதுடன் மோசடி மற்றும் ஊழல் நடத்தையை நாங்கள் பொறுத்துக் கொள்வதில்லை.

**பொது வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துதல்**
மாகாண வளங்களை பொறுப்புடனும் கடமையுணர்வுடனும் பயன்படுத்துகிறோம்.

**பரிசுப்பொருட்கள் மற்றும் பலன்களைக் கையாளுதல்**
பரிசுப்பொருட்கள் மற்றும் பலன்களைப் பெறும்போது அல்லது வழங்கும்போது நாணயத்தையும் நெறியையும் கடைபிடிக்கிறோம்.

**நலன் முரண்பாட்டை அறிவித்தல் மற்றும் கையாளுதல்**
எங்கள் தனிநபர் அல்லது தனிப்பட்ட நலன்களும் இத்தோடு இணைந்தவைகளின் நலன்களும் எங்கள் பொதுவான கடமைகளுடன் முரண்படாதிருப்பதை அல்லது முரண்படுவதாகத் தோன்றாதவகையில் இருப்பதை உறுதிசெய்கிறோம்.

**சமத்துவமாகப் பணியமர்த்துதல்**
பொதுத்துறை ஆணையாளரின் வேலைவாய்ப்பு தரநிலைகளையும் துறையின் மனிதவளக் கொள்கைகள், நடைமுறைகள், வழிகாட்டுதல்களையும் நாங்கள் பின்பற்றுகிறோம்.

**பொறுப்புணர்வுடன் கொள்முதல்களைச் செய்தல்**
நெறிசார்ந்த, நேர்மையான, நியாயமான கொள்முதல் நடவடிக்கைகளைச் செய்வதுடன் முறையான ஒப்பந்தங்களைக் கையாள்கிறோம்.

CC BY

# தவறான நடத்தையைப் புரிந்துகொள்ளுதல்

**பணியாளர்களாக நாம் துறையின் நடத்தை விதிகளைப் பின்பற்றவும் அதன் தரநிலைகளில் கவனமாக இருக்கவும் வேண்டும்.**

இதைச் செய்யத் தவறும் நடத்தைகள் இந்தத் துறைக்கு அவமரியாதையைக் கொண்டுவருவதுடன், பணியில் அல்லது சமூகத்தில் அலுவலரின் நம்பகத்தன்மையைப் பாதிக்கவும் செய்யும். மேலும் நமது சகபணியாளர்கள் மற்றும் நம் பாதுகாப்பில் உள்ள மாணவர்களின் பாதுகாப்புக்கும் நல்வாழ்வுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யாத அலுவலர் விதியை மீறக்கூடியவராக இருக்கக்கூடும் என்பதுடன் அவர் மீது பணியை விட்டு நீக்குதல் உட்பட முறையான ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகவும் கூடும்.

சில சூழல்களில் நடத்தை விதிகளை மீறுதல் என்பது கடுமையான குற்றச் செயல் செய்யப்பட்டிருப்பதான கவலையையும் ஏற்படுத்தக்கூடும்.

### எங்கள் தரநிலைகளைப் பூர்த்திசெய்யாத அலுவலரின் நடத்தையைப் புகாரளித்தல்

நாம் பார்க்கும் அல்லது கேட்கும் ஏதேனும் பொருத்தமற்ற, நயமில்லாத அல்லது சட்டத்துக்குப் புறம்பான நடத்தை குறித்து நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். நாம் பார்த்த அல்லது அதற்கு உட்பட்ட நடத்தையின் இயல்பையும் கடுமையையும் பொறுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை வேறுபடலாம். எனினும், இதில் முக்கியமானது நாம் **குரல் கொடுப்பதுதான்**.

என்ன நடவடிக்கை எடுப்பது என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டாலோ அல்லது குறையை அல்லது முரண்பாட்டை உங்களால் தீர்க்கமுடியாது என்று உணர்ந்தாலோ, நயமான முறையில், முடிந்தவரை உடனடியாக சம்பந்தப்பட்ட நபருடன் நேரடியாக அந்த விசயத்தை உங்கள் முதல்வர் அல்லது மேலாளருடன் நற்பெயருக்குக் கலங்கம் ஏற்படுவது அல்லது தீங்கு ஏற்படுவது குறித்த கவலையின்றி கலந்துபேச வேண்டும்.

உங்கள் சூழலுக்கு அது உகந்ததாக இல்லையெனில், மேலும் மூத்த நபர் ஒருவரிடம் புகாரளிக்கவோ அல்லது அது இயலாதெனில் தரநிலைகள் மற்றும் நாணயத்துக்கு நேரடியாகப் புகார் செய்யலாம்.

தரநிலைகள் மற்றும் அவற்றை ஆதரிக்கும் கொள்கைகள் குறித்து கூடுதல் தகவல்கள் தேவைப்படும் அலுவலர்கள் பொறுப்புள்ள நெறிசார் முடிவெடுத்தல் பயிற்சியை அணுகுவதற்கு Ikon பக்கத்திற்குச் செல்லவும்.

இந்த விதிகள் மற்றும் தரநிலைகளில் ஏதேனும் அம்சத்தில் உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கூடுதல் வழிகாட்டுதல் தேவையெனில், தயவுசெய்து தொடர்புகொள்ளவும்:

**Professional Standards and Conduct**
Department of Education
Level 2, 151 Royal Street
East Perth WA 6004
9264 4740
codeofconduct@education.wa.edu.au

**ஆலோசனை எண்**
1800 655 985

**உறைவிடக் கல்லூரிகள் புகார் எண்**
1800 011 114

**Shaping the future**

TRIM Ref: D21/0297195
SCIS: 5357025

© கல்வித்துறை
மேற்கு ஆஸ்திரேலியா 2021

**Department of Education**
151 Royal Street
East Perth WA 6004
9264 4111
**education.wa.edu.au**

இந்த விபரங்கள் கோரிக்கையின் பேரில் வேறு வடிவமைப்புகளில் கிடைக்கும்.